### குத்தாலம் பி.கல்யாணம் தலைமை!

# குத்தாலத்தில் முன்னாள் அமைச்சர் கோ.சி.மணி சிலை திறப்பு விழா!

## மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

மயிலாடுதுறை, செப்.19- மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் ஒன்றிய தி,மு.க. அலுவலகத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் அன்பு தம்பியாக, சோழமண்டல தளகத்தர் முன்னாள் அமைச்சர் கோ.சி. மணி 96வது பிறந்த நாள் விழா மற்றும் கோசி. மணி முழு உருவ திருஉருவ சிலை திறப்பு விழா நடைபெற்றது. விழாவிற்கு கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினரும், சிலை அமைப்பு குழு தலைவர் மற்றும் செயலாளருமான குத்தாலம் பி.கல்யாணம் தலைமை தாங்கினார். குத்தாலம் வடக்கு ஒன்றியச் செயலாளர் கு.வைத்தியநாதன் வரவேற்றார். முன்னாள் அமைச்சர் கோ.சி. மணி திருஉருவச் சிலையை மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் திறந்து வைத்தார்.

நிகழ்ச்சியில் கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், மாநில விவசாய தொழிலாளர் அணி இணைச் செயலாளர் ஜெக. வீரப்பாண்டியன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ப.கோவிந்தரசான், ஜி.என்.ரவி, முத்து மகேந்திரன், மாவட்டக் கழக அவைத்தலைவர் கோ.ஜி. சினிவாசன், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ். செல்வமணி முன்னாள் அமைச்சர் கோ.சி.மணி குடும்பத்தைச் சேர்ந்த ஆடுதுறை பேரூர் செயலாளர் கோசி.இளங்கோ, அன்பு, புகழேந்தி, கீதா, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கோ.சி.ம. திருமாவளவன், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், ஒன்றியக் கழகச் செலயாளர்கள் மங்கை எம்.சங்கர், என். இளையபெருமாள், எம். அப்துல்மாலிக், பி.எம்.அன்பழகன், அமிர்த. விஜயகுமார், பஞ்சுகுமார், ஏ.ஜி.ஜெ.பிரபாகர், ப.முருகமணி, ஞான.இமையநாதன், ஏ.ஆர்.ராஜா, வலைங்கமான் வி.அன்பரசன், கீழ்வேளூர் தெற்கு கே.பழனியப்பன், குடவாசல் பி.பிரபாகரன், நகரக் கழக செயலாளர்கள் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், ம.சுப்பராயன், பொதுக் குழு உறுப்பினர் நத்தம் ஏ.வின்சென்ட், குத்தாலம் ஒன்றியக் குழு தலைவர் மகேந்திரன், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் க.அறிவழகன், எம். கே.மருது, இரா.மனோகரன், வி.எஸ்.என்.செந்தில், பிரபாகர், குத்தாலம் பேரூராட்சி தலைவர் சங்கீதா மாரியப்பன் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், டாக்டர் செல்வம், ஒய்வு பெற்ற காவல் துணை கண்காணிப்பாளர் ரவி மற்றும் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழக மூத்த முன்னோடிகள், சார்பு அணி நிர்வாகிகள், கழகத்தினர் கலந்து கொண்டனர். முடிவில் குத்தாலம் பேரூர் கழகச் செயலாளரும், பேரூராட்சி துணைத்தலைவர் எம்.சமசுதீன் நன்றி கூறினார். முன்னதாக குத்தாலம் கடைத் தெருவில் உள்ள அண்ணா சிலையில் இருந்து குத்தாலம் ஒன்றிய அலுவலகம் வரை கோசி. மணி பிறந்த நாள் ஊர்வலம் கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம் தலைமையில் நடைபெற்றது.





வானூர் கிழக்கு ஒன்றியம், ஒழிந்தியாப்பட்டு ஊராட்சியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் கழக பவள விழாவை முன்னிட்டு ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஒ.ஆர்.எஸ்.ராஜா ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் டாக்டர் .பொன்.கௌதமசிகாமணி 100 அடி உயர கம்பத்தில் கழகக் கொடியேற்றி நலத்திட்ட உதவிகளை வழங்கினார். ஒன்றியச் செயலாளர் பி.கே.டி முரளி வரவேற்புரையாற்றினார். ஒன்றிய குழுத் தலைவர் உஷா பி.கே.டி முரளி, ஒன்றியச் செயலாளர்கள் கே.எஸ்.ராஜி, மைதிலி ராஜேந்திரன், நகர செயலாளர் எஸ்.எஸ். ஜெயமூர்த்தி, பொதுக்குழு உறுப்பினர் டி.ஆர்.இளங்கோவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்ட துணை செயலாளர் தயா.இளந்திரையன், செயற்குழு உறுப்பினர் கோ.பாஸ்கரன், ஒன்றியச் செயலாளர் கல்பட்டு வி.ராஜா, வே.கணேசன், மாவட்ட கவுன்சிலர்கள் அன்புமணி, கௌதம், ஒன்றிய குழு துணை தலைவர் பருவகீர்த்தனா விநாயகமூர்த்தி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் செ.தினகரன், தலைமைக் கழக பேச்சாளர் முருக்கம் முனுசாமி ஒன்றிய நிர்வாகிகள் சங்கர், எத்திராஜ், ஏழுமலை, சங்கர், நாதமணி, சம்பத், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ப.அன்பரசு, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் சக்திவேல், மாவட்ட மருத்துவர் அணி வினோ பாரதி, மாவட்ட மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர் லட்சுமி குருவேல், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் தேவேந்திரன், பொன்னுரங்கம், ஏழுமலை , முருகன், பிரபாகரன், ஏழுமலை, சங்கர், குமரன், பசுபதி, கண்ணாயிரம், மகளிர் அணி தவமணி, அருணாகிரி, கணபதி, மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### நாமக்கல் மேற்கு மாவட்டம் ஒன்றிய, நகர, பேரூர்க் கழக

# மாணவரணி நிர்வாகிகளுக்கான நேர்காணல்!

## மாவட்ட கழக செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் அறிக்கை



நாமக்கல், செப்.19- நாமக்கல் மேற்க மாவட்டச் செயலாளர் எஸ்.எம். மதுரா செந்தில் அறிக்கை வருமாறு:

கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மாணவர் அணி செயலாளர் சி.வி. எம்.பி.எழிலரசன் எம். எல்.ஏ அவர்களின் அறிவிப் பின்படி நாமக்கல் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட பரமத்தி வேலூர், திருச்செங்கோடு, குமாரபாளையம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் மாணவர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் நேர்காணல் வருகின்ற 21.09.2024 சனிக்கிழமை மதியம் 1.00 மணி அளவில் நாமக்கல் மேற்கு மாவட்ட கழக அலுவலகம், திருச்செங்கோடு, வேலூர் ரோடு, தளபதியார் அரங்கில் நடைபெறும். மாநில மாணவர் அணி இணைச் செயலாளர் எஸ்.மோகன், துணைச் செயலாளர்கள் சேலம். ரா.தமிழரசன், கா.பொன்ராஜ், வி.ஜி.கோகுல் ஆகியோர்கள் முன்னிலையில் நேர்காணல் நடைபெறவுள்ளது. ஒன்றிய, நகர, பேரூர் பகுதிகளில் ஒரு அமைப்பாளர் மற்றும் ஐந்து துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்படவுள்ளதால், நேர்காணலின் போது கல்வி சான்றிதழ்கள், உறுப்பினர் அட்டை மற்றும் கழகப் பணியாற்றிய விபரங்களை கொண்டு வர வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

# செஞ்சி கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாள் விழா!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் பங்கேற்பு!

செஞ்சி, செப். 19- பேரறிஞர் அண்ணா அவர்களின் 116வது பிறந்த நாள் விழா தமிழகம் முழுதும் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

அந்த வகையில் விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் பேரறிஞர் அண்ணாவின் பிறந்தநாள் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இதை முன்னிட்டு செஞ்சி கிழக்கு ஒன்றியம் அப்பம்பட்டு ஊராட்சியில் செஞ்சி கிழக்கு ஒன்றிய செயலாளரும், ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமையில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த பேரறிஞர் அண்ணாவின் திருவுரு வப்படத்திற்கு

சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் மலர் தூவி மரியாதை செலுத்தினார். தொடர்ந்து பொதுமக்களுக்கு இனிப்பு மற்றும் பிரெட் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை அவர் வழங்கினார் .

இதில் மாநில பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், ஒன்றியஅவைத்தலைவர்கள் ஆறுமுகம், வாசு , ஒன்றிய விவசாய அணி அமைப்பாளர் பெருகாப்பூர் ராஜேந்திரன் , துணை செயலாளர்கள் குமார், மதியழகன் செல்வமணி, தாட்சாயினிகார்த்திகேயன், பொருளாளர் இக்பால் . மாவட்ட பிரதிநிதிகள் ரவி, கோடீஸ்வரன், மாணவரணி அமைப்பாளர் பிரசன்னா , ஆகியோர் மாலை அணிவித்து மலர்தூவிமரியாதை செலுத்தினர். முன்னதாக பள்ளியம்பட்டு மீனம்பூர் கூட்டு சாலையில் பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளை முன்னிட்டு கொடியேற்று விழா நிகழ்ச்சி நடைபெற்றது . நிகழ்ச்சியில் அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு தி.மு.க. கொடியினை ஏற்றி வைத்து பொது மக்களுக்கு இனிப்புகளை வழங்கினார் . நிகழ்ச்சியில் ஒன்றிய பெருந்தலைவர்விஜயகுமார், ஊராட்சி மன்ற தலைவர்கள் முன்வர், கல்யாணி ஜாக்கி, கிளைக் கழக செயலாளர்கள் குப்புசாமி, பாலு, இளைஞர் அணி பாரத்,ஆனந்த் உள்ளிட்டோர்கலந்து கொண்டனர்.

# தி.மு.க. இளைஞர் அணியின் சார்பில் கூத்தாநல்லூரில் கலைஞர் நூலகம் திறப்பு!

## பூண்டி கலைவாணன் - நா.இளையராஜா - ஆனந்த்குமார் பங்கேற்பு!

திருவாரூர்,செப்19- திருவாரூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கூத்தாநல்லூர் நகரத்தில் மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதல்களின்படி கலைஞர் நூலகம் திறக்கப்பட்டது. திமுக மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., மாநில இளைஞர் அணி துணை செயலாளர்கள் நா.இளையராஜா, ஆனந்தகுமார், மாவட்ட அமைப்பாளர் பணங்குடி ஏ.எஸ்.குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைகளின்படியும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதல்களின்படியும் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு இளைஞர் அணியின் சார்பில் ஊருக்கு ஒரு நூலகம் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

திருவாரூர் மாவட்டத்தில் இந்த நூலகம் அமைக்கும் திட்டம் மாவட்ட செயலாளர் பூண்டி கே. கலைவாணன் எம்.எல்.ஏ. அவர்களின் துணையோடு இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் பணங்குடி ஏ.எஸ்.குமார் மற்றும் துணை அமைப்பாளர்கள் ஏற்பாட்டில் ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் ஒத்துழைப்போடு நூலகங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

திருவாரூர் சட்டமன்றதொகுதிகுட்பட்ட கூத்தாநல்லூர் நகரத்தில் பள்ளிகள் நிறைந்த பிரதான பகுதியான மேலத்தெருவில் கலைஞர் நூலகம், இளைஞர் அணியினரால் திறக்கப்பட்டது. மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமை ஏற்று நூலகத்தை திறந்துவைத்தார் .

மாநில இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் நா.இளையராஜா, ஆனந்தகுமார், மாவட்ட அமைப்பாளர் பணங்குடி ஏ.எஸ். குமார் , நகர செயலாளர் எஸ்.வி.பக்கிரிசாமி, நகர்மன்ற தலைவர் பாத்திமா பஷீரா ஆகியோர் முன்னிலை வகித்தனர். நூலகம் திறப்பு விழாவை முன்னிட்டு மாணவர்களுக்கு இலவச கல்வி உபகரங்களும், பொதுமக்களுக்கு மரக் கன்றுகளும் வழங்கப் பட்டன.

நிகழ்வில் இளைஞர் அணி சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர்கள் சி.கே.. எஸ்.எழிலரசன் , கல்யாண சுந்தரம் , மாவட்ட துணை அமைப்பாளர்கள் வி.கே. முருகானந்தம் , வினோத்குமார், எம்.பி.எடிசன், தாகீர் அலி, நகர மைப்பாளர் ராசன் பைசல், மாணவரணி மாவட்ட மு.துணை அமைப்பாளர் எஸ்.வி.பி. செந்தில், டி.கே.தேவா, மாவட்ட ஆதிதிராவிடர் நல அணி துணை அமைப்பாளர் பொன்.பக்கிரிசெல்வம் மற்றும் நகர் மன்ற உறுப்பினர்கள், நகர கழக நிர்வாகிகள் ,பொதுமக்கள் பெருமளவில் பங்கேற்றனர்.

# பெரம்பலூரில் பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா!

## ஆ.இராசா.எம்.பி. வீ.ஜெகதீசன்,எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. பங்கேற்பு

பெரம்பலூர்,செப்,19- பேரறிஞர் அண்ணா அவர்களின் 116 வது பிறந்த நாளை முன்னிட்டு, பெரம்பலூர் பாலக்கரை, மாவட்ட கழக அலுவலகத்தில் உள்ள கம்பத்தில், கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா.எம்.பி., கழக கொடியேற்றி, மாவட்ட கழக அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த பேரறிஞர் அண்ணா அவர்களின் உருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.இந்த நிகழ்ச்சியில் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் குன்னம் சி. இராஜேந்திரன்,தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மு.அட்சயகோபால், வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச்செயலாளர் பா.துரைசாமி, மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார்,

பொதுக்குழு உறுப்பினர்கள் கி.முகுந்தன், எஸ்.அண்ணாதுரை, பட்டுச்செலவி ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், நூருல்ஹிதா இஸ்மாயில்,சன்.சம்பத், மாவட்ட பொருளாளர் செ.ரவிச்சந்திரன்,

ஒன்றிய கழக செயலாளர்கள் என். கிருஷ்ணமூர்த்தி, எம்.ராஜ்குமார், எஸ்.நல்லதம்பி, தி.மதியழகன், ந.ஜெக தீஷ்வரன், சி.ராஜேந்திரன், ஒன்றிய பொறுப்பாளர் டாக்டர் செ.வல்லபன், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் ப.செந்தில்நாதன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன்(எ) ஹரிபாஸ்கர், துணை அமைப்பாளர்கள் டி.ஆர்.சிவசங்கர், அ.அப்துல்கரீம், ஆர்.அருண்,மா. பிரபாகரன், வ.சுப்ரமணியன், பேரூர் கழக செயலாளர்கள் எம்.வெங்கடேசன், ஆர்.ரவிச்சந்திரன், செல்வலெட்சுமி சேகர், ஏ.எஸ். ஜாகிர்உசேன், ஒன்றிய பெருந்தலைவர்கள் மீனா அண்ணாதுரை, பிரபா செல்லப்பிள்ளை, துணை பெருந்தலைவர்கள் எம். ரெங்கராஜ், சாந்தாதேவி குமார், பேரூராட்சி தலைவர்கள் வள்ளியம்மை ரவிச்சந்திரன், பாக்கியலட்சுமி செங்குட்டுவன், சங்கீதா ரமேஷ், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் கவிஞர் முத்தரசன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், மாவட்ட அயலக அணி அமைப்பாளர்எ.ரகூல்அகமது, மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க.கமல், துணை அமைப்பாளர்கள் இளையராஜா, தமிழ்வேந்தன்,மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் எம்.மணிவாசகம், மற்றும் மதுபாலன், பூலாம்பாடி வினோத் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### வார்டுச் செயலாளர் கே.ராஜேந்திரன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் திண்டிவனம்

# 14 வது வார்டில் தந்தை பெரியார் பிறந்தநாள் - தி.மு.க. பவள விழா!

## இரா.மாசிலாமணி தலைமை! கே.அசோகன் - சீனி சின்னசாமி பங்கேற்பு!

திண்டிவனம், செப். 19 விழுப்புரம் வடக்கு மாவட்டம், திண்டிவனம் நகரம், 14 வது வார்டு கிளை தி.மு.க. சார்பில் தந்தை பெரியார் அவர்களின் 146 ஆவது பிறந்தநாள் விழா மற்றும் தி.மு.க. பவள விழா முன்னிட்டு வார்டுக் கழகச் செயலாளர் கே.ராஜேந்திரன் ஏற்பாட்டில் திண்டிவனம், செஞ்சி சாலையில் தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தி, கழக இருவண்ணக் கொடியேற்றி, பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடப் பட்டது.

இந்நிகழ்ச்சியில் மைலம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி தலைமையேற்று சிறப்பித்தார்.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் மாவட்டக் கழக துணைச் செயலாளர் திண்டிவனம் வழக்கறிஞர் கே. அசோகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சீனி சின்னசாமி எம்.சி, மாவட்டப் பிரதிநிதி வி.எஸ்.முருகன், நகரக் கழக பொருளாளர் சின்னா கே. ராஜேந்திரன், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் எல்.ஐ.சி.ரஜேஷ், திராவிடர் கழகத்தை சார்ந்த மாவட்ட அமைப்பாளர் செ.பரந்தா மன், மாவட்ட பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் ந.வா.ஏழுமலை, கா.மு.தா.இளபரிதி, அன்பழகன், கா.மு.தா.பிரபாகரன், உ.பச்சையப்பன், விஜயலட்சுமி, நிவேதா இளம்பரிதி, விஜயலட்சுமி, செ.சிவா, என்.ராசேந்திரன், எஸ்.வேதமூர்த்தி, தேன்மொழி, பெருமாள், கோவிந்தாபுரம் ஏ.கே.சீத்தாராமன், இறையனூர் ராஜேஷ், ஆர்.கண்ணியப்பன், கே.கே.தாஸ், என். ராஜசேகரன், கே.பாபு, எம். காசிநாதன் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

விழுப்புரம் வடக்கு மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் எம்.குப்புசாமி நன்றி கூறினார்.

நிகழ்ச்சி ஏற்பாட்டினை 14 வது வார்டுக் கிளைக் கழகச் செயலாளர் கே.ராஜேந்திரன் செய்திருந்தார்.



விழுப்புரம் வடக்கு மாவட்டம், திண்டிவனம் நகரம், 14 வது வார்டு கிளை தி.மு.க. சார்பில் தந்தை பெரியார் அவர்களின் 146 ஆவது பிறந்தநாள் விழா மற்றும் தி.மு.க. பவள விழா முன்னிட்டு வார்டுக் கழகச் செயலாளர் கே.ராஜேந்திரன் ஏற்பாட்டில் தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தி, கழக இருவண்ணக் கொடியேற்றி, பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடப்பட்டது. மைலம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் டாக்டர் இரா.மாசிலாமணி தலைமையேற்று சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியில் திண்டிவனம் வழக்கறிஞர் கே.அசோகன், சீனி சின்னசாமி எம்.சி, வி.எஸ்.முருகன், சின்னா கே.ராஜேந்திரன், எல்.ஐ.சி.ரஜேஷ், செ.பரந்தாமன், ந.வா.ஏழுமலை, கா.மு.தா.இளபரிதி, அன்பழகன், கா.மு.தா.பிரபாகரன், உ.பச்சையப்பன், விஜய லட்சுமி, நிவேதா இளம்பரிதி, விஜயலட்சுமி, செ.சிவா, என்.ராசேந்திரன், எஸ்.வேதமூர்த்தி, தேன்மொழி, பெருமாள், கோவிந்தாபுரம் ஏ.கே.சீத்தாராமன், இறையனூர் ராஜேஷ், ஆர்.கண்ணி யப்பன், கே.கே.தாஸ், என்.ராஜசேகரன், கே.பாபு, எம்.காசிநாதன் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். எம்.குப்புசாமி நன்றி கூறினார்.

### கோவை வடக்கு மாவட்டம் - 35வது வட்டக் கழகம் சார்பில்

# கழக பவளவிழா - முப்பெரும் விழா கழகக் கொடியேற்றல்!

## ஆர்.குமரேசன் ஏற்பாட்டில் சோ.துரைப்பாண்டியன் தலைமையில் நடைபெற்றது!

கோவை,செப்.19- கோவைடக்கு மாவட்டம், 35வது வட்டக் கழக அலுவலகமான க. மருதமுத்து நினைவு படிப்பகத்தில் 35 வது வட்டக் கழகத்தின் சார்பாக கழகத்தின் பவளவிழா முப்பெரும் விழாவாக 35 வது வட்டக் கழக செயலாளர் ஆர்.குமரேசன் ஏற்பாட்டில், வட்ட கழக அவை தலைவர் சோ.துரைப்பாண்டியன் தலைமையில், 35 வது வார்டு மாமன்ற உறுப்பினர் நா.சம்பத் முன்னிலையில், கழகக் கொடியேற்றி இனிப்பு வழங்கப்பட்டது.

இதில் முன்னாள் பகுதிச் செயலாளர் கா.மதியழகன், மூத்த முன்னோடிகள் கா. பொன்னரசு, ஆர்.சண்முகம், விக்னேஷ், பாலசுப்பிரமணியம், வெள்ளியங்கிரி, சதீஷ், டேபிள் ராமசாமி, பெஸ்ட் அன்பு, நாகராஜ், புஷ்பா ராஜேந்திரன் மாதேஸ்வரன் முனியப்பன், ஏடிஎம் பழனிச்சாமி, எல். எம்.டபிள்யூ செல்வம் துரை (எ) சுப்பிரமணியன், ஆர். கே.குமார், வெற்றிச்செல்வன், குணசேகரன், ஆட்டோ செல்வம், ஆசீர் வாதம்,லலிதா, சோனைச் சாமி ,

கழக நிர்வாகிகள் டி. மணி, குணசீலன், சக்தி, கௌசல்யா, சுமதி புஷ்பா, சங்கர், மணிகண்டன், ஜாகிர் உசேன், சங்கரபாண்டியன், சிராஜுதீன், பிரசன்னா, காளிமுத்து, முருகவேல் தியேட்டர் ராம்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதில் கழகக் கொடி ஏற்றி விண்ணதிர முழக்கங்கள் எழுப்பி பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி, அதிர்வெட்டுகள் வாண வேடிக்கைகள் முழங்க உற்சாகத்துடன் சிறப்புற முப்பெரும் விழா பொதுமக்கள் முன்னிலையில் கொண்டாடப்பட்டது.

மேலும் கழக மூத்த முன்னோடி வேலாச்சாமி கழகக் கொடியேற்றி சிறப்பித்தார்.




கோவை வடக்கு மாவட்டம், 35வது வட்டக் கழக அலுவலகமான க. மருதமுத்து நினைவு படிப்பகத்தில் 35 வது வட்டக் கழகத்தின் சார்பாக கழகத்தின் பவளவிழா – முப்பெரும் விழாவாக 35 வது வட்டக் கழக செயலாளர் ஆர்.குமரேசன் ஏற்பாட்டில், வட்ட கழக அவை தலைவர் சோ.துரைப்பாண்டியன் தலைமையில், 35 வது வார்டு மாமன்ற உறுப்பினர் நா.சம்பத் முன்னிலையில் கழகக் கொடியேற்றி இனிப்பு வழங்கிக் கொண்டாடப்பட்டது. இதில் முன்னாள் பகுதிச் செயலாளர் கா.மதியழகன், மூத்த முன்னோடிகள் கா.பொன்னரசு, ஆர்.சண்முகம், விக்னேஷ், பாலசுப்பிரமணியம், வெள்ளி யங்கிரி, சதீஷ், டேபிள் ராமசாமி, பெஸ்ட் அன்பு, நாகராஜ், புஷ்பா ராஜேந்திரன் மாதேஸ்வரன் முனியப்பன், ஏடிஎம் பழனிச்சாமி, எல்.எம். டபிள்யூ செல்வம் துரை (எ) சுப்பிரமணியன், ஆர்.கே. குமார், வெற்றிச்செல்வன், குணசேகரன், ஆட்டோ செல்வம், ஆசீர்வாதம் ,லலிதா, சோனைச்சாமி, கழக நிர்வாகிகள் டி.மணி, குணசீலன், சக்தி, கௌசல்யா, சுமதி புஷ்பா, சங்கர், மணிகண்டன், ஜாகிர் உசேன், சங்கரபாண்டியன், சிராஜுதீன், பிரசன்னா, காளிமுத்து, முருகவேல் தியேட்டர் ராம்குமார் உள்ளிட்ட பலர் கழக மூத்த முன்னோடி வேலாச்சாமி கழகக் கொடியேற்றி சிறப்பித்தார்.